IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
KATPADI, VELLORE DISTRICT.

C.C.NO.66/2025

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | SARASWATHI |
| FATHER'S NAME | : | VARADHARAJ |
| VILLAGE | : | PERIYAPUDUR |
| OCCUPATION | : | FARMER |
| AGE | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 20th day of APRIL 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது பெரியபுதூரில் வசித்து வருகிறேன். மாடு மேய்த்தல் மற்றும் விவசாயம் செய்து வருகிறேன். என் கணவர் சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்டார். தேதி மாதம் ஞாபகமில்லை. சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக நான் பகல் 1 மணியளவில் நடமாட்டம் இல்லாத பகுதியில் ரோட்டு ஓரமாக நான் மாடு மேய்த்து கொண்டிருந்தேன். அந்த இடத்தின் பெரியபுதூர் ஆகும். அப்பொழுது இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்து என்னிடம் முகவரி கேட்டார்கள். அப்பொழுது நான் முகவரி கூறிவிட்டு திரும்பிய போது இருவரும் என் கழுத்தில் இருந்த 3 சவரன் 3 குண்டு வைத்த தங்க நகையை அறுத்து விட்டார்கள். நான் சத்தம் போட்டேன். அவர்கள் இருவரும் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று விட்டார்கள். நான் எதிரிகளை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். நான் வழக்கு சம்மந்தமாக புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள இடது கை பெருவிரல் ரேகை என்னுடையது தான். அந்த புகார் மனு**அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து நகையை இடைக்கால பொறுப்பில் பெற்று சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகையை தான் நான் பெற்று சென்றேன். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>(சாட்சி எதிரியை அடையாளம் காட்ட வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)</u>**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 20.04.2026 ஆம் தேதி பகரப்பட்டது.

S K P DILIP BABU  Digitally signed by S K P DILIP BABU

நீதித்துறை நடுவர்,
காட்பாடி.